Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 175/2024 PW-4**

Name : திரு.முருகானந்தம்
Father / Husband name : சாமிநாதன்
Village : திண்டிவனம்
Age : 52
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 13.03.2026

Accused present. Both side counsel present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது திண்டிவனம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்துவருகிறேன். இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்த உதவி ஆய்வாளர் தங்கம் அவர்களின் கையெழுத்தும் கையொப்பமும் எனக்கு நன்கு பரிச்சியம். இந்த வழக்கில் ஆவணத்தின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 02.11.2023 ந்தேதி 11.45 மணிக்கு திண்டிவனம் காவல் நிலைய ஆய்வாளர் தங்கம் நிலைய பொறுப்பிலிருந்தபோது அ.சா1 நிர்மலா என்பவர் நிலையம் ஆஜராகிகொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண் 512/2023, U/s 447,294(b),323,324,506(i) IPC & 4 of TNPHW Act ன் படி வழக்கு பதிவு செய்துள்ளார். **அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 13.40 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் தீபக்குமார் மற்றும் கலைமணி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார்செய்துள்ளார். பார்வை மகசரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **அந்த பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அசாஆ 3 மற்றும் 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கின் சம்பவ

சாட்சிகளான நிர்மலா, லோகநாதன், பிரவின், டில்லிபாபு ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சாட்சிகளின் விசாரணையிலிருந்து சம்பவம் உண்மை என தெரியவர எதிரியை தேட எதிரி அன்றையதினமே 16.30 மணிக்கு திண்டிவனம் ஆர்எஸ் பிள்ளைத்தெருவில் சாட்சிகள் எதிரியை அடையாளம் காட்ட காரணம் கூறி கைது செய்து 17.00 மணிக்கு நிலையம் அழைத்துவந்து திரேக பரிசோதனைக்கு பின் பாராவசம் ஒப்படைத்துள்ளார். பின்னர் இந்த வழக்கில் காயம்பட்ட லோகநாதன், பிரவின்குமார் ஆகியோர்களுக்கு மருத்துவசிகிச்சை அளித்த உதவி மருத்துவர் ராஜசேகர் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பெற்று காயச்சான்றிதழ் பெற்றுள்ளார். **அந்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ்கள் அசாஆ 5, 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கின் விசாரணையை முடித்து எதிரி மீது U/s 447,294(b),323,324,506(i) IPC & 4 of TNPHW Act படி குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அ.சா.1 புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாரை விசாரணை அதிகாரி சரிவர விசாரிக்காமல், சம்பவயிடம் செல்லாமல், சாட்சிகளை விசாரிக்காமல் அனைத்து ஆவணங்களையும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்துவிட்டார் என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன சமயத்தில் எதிரியை கைது செய்யவில்லை. எதிரியின் மீது தவறாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.